2017 ஜூலை 3]

விற்பனை மையம் அமைக்க வேண்டுமென்று 1966 ஆம் ஆண்டே அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, வல்லத்தில் உள்ள அந்த அரசு புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி, ஒரு வேளாண்மை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, வேளாண்மை விற்பனை மையத்திலுள்ள பரிவர்த்தனைக் கூடங்களை, transit sheds என்று சொல்கிறோம். அந்தக் கூடங்களையெல்லாம் விவசாயிகள் பயன்படுத்துவதைவிட, வியாபாரிகள்தான் அதிகமாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே, அந்தக் குறைபாட்டையும் நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சேத்துப்பட்டு விற்பனைக்கூடத்தில் ஏறத்தாழ 2 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளினுடைய பணம் கொடுக்கப்படாததால், மோதல் ஏற்பட்டிருக்கிறது. அது 6 மாத காலமாக திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வல்லம் பகுதியில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஆராய்ந்து, அங்கு நிலம் இருக்குமேயானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இரண்டு கோடி ரூபாய் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், துறை அதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கூடிய விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூலை 3

118—

பொழுதுபோக்குப் பூங்கா

***1310—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர், வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கப் பகுதியில் பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், அந்தியூர், வரட்டுப்பள்ளம் பகுதியில் பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து, சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள் வினவியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம் காப்புக் காடுகள் பகுதியில் (Reserve Forests) *உள்ளதால், சுற்றுலாத் துறையின்மூலம் பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பதற்கோ, அடிப்படை வசதிகள் செய்வதற்கோ சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வணைப் பகுதி காப்புக் காடுகளாக வனத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மற்றும் அதன் அருகிலுள்ள இடங்களிலிருந்து வார இறுதி நாட்களில் குறைந்த அளவிலேயே சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கப் பகுதியில் பூங்கா அமைக்க அவசியம் ஏற்படின், அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு, நிதி நிலைக்குட்பட்டு, சுற்றுலா ஆணையரின் பரிந்துரையுடன் சுற்றுலாத் துறையின்மூலம், பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

2017 ஜூலை 3]

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவே வியந்து பார்க்கும் அளவிற்கு ஒப்பற்ற தலைவி, தமிழ்நாட்டு மக்களின் இதயத்தில் நிரந்தர இடம்பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் நல்லரசை வழிநடத்தி அம்மாவிற்குப் பெருமை சேர்க்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆசீர்வாதத்தோடு, வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கமானது இருபக்கமும் மலைப் பகுதி மற்றும் வனப் பகுதியைக் கொண்டு, இயற்கை அழகுடன் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. எனவே, வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்தை சுற்றுலாத் தலமாக அறிவித்து, பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து, அதில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தந்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு நல்லதொரு சுற்றுலாத் தலமாக அமைவதுடன், அந்தியூர் தொகுதிக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசுக்கும் பெருமை சேரும். எனவே, அங்கு பொழுதுபோக்குப் பூங்கா அமைக்கும் திட்டத்திற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் ஒத்துழைப்போடு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதியிலே, பொதுவாக ஈரோடு மாவட்டத்திற்கு சுற்றுலாத் துறையின் வாயிலாக 17 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. ஆகவே, தங்கள் கோரிக்கையை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்*

அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதிநிலைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்குத் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கமானது மலையடிவாரம் மற்றும் வனப் பகுதியை ஒட்டியுள்ளதால், குறைவான மழை பெய்தால்கூட நீர் தேங்கிவிடுகிறது. எனவே, அந்நீர்த்தேக்கத்தில் ஒரு படகு இல்லம் அமைத்தால், அது சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் உல்லாசப் பயணமாக அமையும் என்பதால், படகு இல்லம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரட்டுப்பள்ளம் பகுதியிலே நீர்த்தேக்கம் உள்ளதாகவும், படகு சவாரி அமைத்துக் கொடுத்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்கின்ற கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். தங்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான, கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப நிறைவேற்றித் தர நிச்சயம் அரசு முயற்சி செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*